DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 68/2024

Prosecution witness PW - 5

| | | |
|---|---|---|
| Name | …. | சீனிவாசன் |
| Husband/Father's Name | .... | குப்புசாமி |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 27th day of January 2026.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது செய்யாறில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் முனுகபட்டு. ஆஜர் எதிரிகள் வெங்கடேசன், சுரேஷ், ஜெகன் மற்றும் தரணி ஆகியோர்களை தெரியும். மகேஷ் என்பவர் தூக்கு மாட்டிக்கொண்ட விவரம் தெரிந்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவம் வரதராஜன் மகன் பத்மநாபன் நிலத்தில் முள்வேலியில் தூக்கு மாட்டிக்கொண்டிருந்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து கயிற்றை கைப்பற்றி, வரைபடம் வரைந்தார்கள். போலிசர் தயார் செய்த பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ.4 ஆகும். அதேபோல கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ.5 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கும் போது சம்பத்தன்று சுமார் 10.00 மணி இருக்கும். இறந்தவரின் அம்மா வசந்தா எனக்கு மாமி முறை ஆவார். என்னையும், மனோகரையும் சேர்த்து ஊர் பொது மக்கள் 50 நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். உறவுக்காரர் வந்து கையொப்பம் செய்யும்படி போலிசார் கேட்டார்கள் என்றால் நாங்கள் முன்னாடி அங்கிருந்ததால் கையொப்பம் வாங்கினார்கள். அதன்பிறகு நான் காவல் நிலையம் சென்ற போது நேரம் சுமார் 11.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் இருக்கும். மனோகர் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். எதிரிகளை காண்பித்து போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். ஒரு கையொப்பம் சம்பவ இடத்திலும், மற்றொரு கையொப்பம் காவல் நிலையத்திலும் போட்டேன். சம்பவத்திற்கு பிறகு போலிசார் என்னிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை. தற்போது தான் சாட்சியம் அளிக்கிறேன். இறந்தவர் எனது உறவினர் என்பவதால் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(3 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**